[6th November 1965

எப்படியோ அதைப் பார்த்து கமிட்டி செய்கிறது. கமிட்டி என்று ஏற்படுத்திவிட்டு, அதன் மேல் தப்பாகச் சொல்லுவது அவ்வளவு நல்லதல்ல என்பதை சொல்ல விரும்புகிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: இப்பொழுது ஜனத்தொகை அடிப் படையை வைத்து இந்த ஸ்தானங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதற்குப் பதிலாக அந்தந்த ஜில்லாவிலே எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு களில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் வைத்தியக் கல்லூரிகளில் மாணவ, மாணவிகளைச் சேர்ப்பது பற்றி அரசாங்கம் திட்டத்தைத் திருத்தியமைக்குமா? ஜனத்தொகை அடிப்படையை வைத்து ஸ்தானங்கள் ஒதுக்கும் முறை அவ்வளவு நல்லது அல்ல என்பதை அரசாங்கம் உணருமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இப்பொழுது இருக்கிற முறைதான் நல்ல முறை. எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கைப் பிரகாரம் வைத்தியக் கல்லூரி களுக்கு மாணவ, மாணவிகளை எடுப்பது என்றால் இன்னும் கஷ்ட மாகப் போய்விடும்.

சேலத்தில் மருத்துவக் கல்லூரி

*328 கேள்வி—திரு. ம. கமலநாதன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா:—

சேலம் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி துவக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சேலத்தில் புதிதாக மருத்துவக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தும் திட்டக் குறிப்பை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும் செயற்குறிப்பு உள்ளது.

திரு. ஆ. துரையரசன்: அவைத் தலைவர் அவர்களே, நான்கா வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழகத்தில் எத்தனை மருத்துவக் கல்லூரிகளைத் திறக்கத் திட்டமிட்டப்பட்டிருக்கிறது என்று அறியலாமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: நான்காவது திட்ட காலத்தில் திருச்சி, கோயமுத்தூர், சேலம் ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரிகளைக் கொண்டுவரவேண்டும் என்று அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதெல்லாம் முன்பு ஏற்பாடு செய்யப்பட்ட விவரம். இப்பொழுது நெருக்கடி நிலையிலே இதெல்லாம் மீண்டும் ஆலோசனை செய்யவேண்டிய விஷயமாக இருக்கிறது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, முக்கியமான தேவை களைப் பொறுத்த வரையில், நெருக்கடி நிலை கொஞ்சம் தளர்த்தப் பட்டு, இவைகளெல்லாம் கவனிக்கப்படும் என்று முதல் அமைச்சர்

பேசிய நேரத்தில் குறிப்பிட்டார்கள். அந்த வகையில், மிகப் பின் தங்கிய சேலம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரியைத் துவக்குவதில் முதல் இடம் அளிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நெருக்கடி நிலைமையையொட்டிக் கோவைப் பிரமுகர்களிடம் நான் சொல்லியிருக்கிறேன். அடுத்த ஆண்டிலே மருத்துவக் கல்லூரியை அமைக்கவேண்டுமென்றால், குறைந்தபட்சமாக 25 லட்ச ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தால் நாங்கள் முதல் ஆண்டிலேயே மருத்துவக் கல்லூரியைக் கோவையில் தொடங்க முடியும் என்று சொல்லியிருக்கிறேன். அம்மாதிரி நான் சேலத்திலே எதிர்பார்க்க முடியாது. அது தான் நிலைமை.

திரு. ம. கமலநாதன் : இரயில்வே செஸ் நிதியிலுள்ள 25 லட்சம் ரூபாயை மருத்துவக் கல்லூரிக்காக நாங்கள் ஒதுக்கி வைத்து விட்டோம். பஞ்சாயத்து யூனியனுடைய சில்லறை வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதை விட, மருத்துவக் கல்லூரியைத் துவக்க அந்தத் தொகையைப் பயன்படுத்தி, அதற்கு முதலிடம் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பதில் பயன் இல்லை. இரயில்வே செஸ் பணத்தைப் பற்றி முன்பே முடிவு செய்யப்பட்டுவிட்டது. ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள கிராமங்களில் எவ்வளவோ வேலைகள் செய்ய வேண்டியிருக்கின்றன. அவற்றுக்காக அந்தத் தொகை ஒதுக்கப்படவேண்டும்.

"நர்சுகள்" பயிற்சி

* 329 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) மருத்துவத் தாதிகள் (Nurses) தங்களுடைய பயிற்சிக் காலத்திலும், கட்டாய சேவைக்காலத்திலும் திருமணம் செய்துக்கொள்ளக்கூடாது என்று கட்டுப்பாடு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதனை தளர்த்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) செவிலியர் (Nurses) தங்கள் பயிற்சிக் கால அளவாகிய மூன்றரை ஆண்டுக் கால அளவிலும் அவர்கள் ஒப்பந்தப் பணிக்காலத்தில் முதல் ஆறு மாதக் கால அளவிலும், திருமணம் செய்துக் கொள்ள அனுமதிக்கப் படுவதில்லை. இக்கால அளவில் மருத்துவச் செவிலி ஒருவர் திருமணம் செய்து கொண்டால், அவர் முன் அறிவிப்பு இன்றி பயிற்சிப் பள்ளியை அல்லது செவிலிப் பணியை விட்டுவிட்டதாகக் கருதப்படுவார்.

(இ) இல்லை.